**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP. 80/2023**

நாள் 25.02.2025

**ம.சா.1. 1 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

விபத்து எங்கு நடந்தது என்றால் தா.பளூர், காராக்குறிச்சியில் நடந்தது. எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் 29.05.2019 ஆம் தேதி அதிகாலை 04.40 மணியளவில் நடந்தது. நான் எந்த வண்டியில் சென்றேன் என்றால் அரசுக்கு சொந்தமான அரசுப்பேருந்தில் பயணம் செய்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc. படித்து டியூஷன் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு மாதம் வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூ.15,000/– வரை வரும். விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் நான் பயணம் செய்த பேருந்து ஓட்டுநர் அதே திசையில் ரோட்டின் நடுப்பகுதியில் லாரியை எவ்வித எச்சரிக்கை விளக்கும் போடாமல் நிறுத்தி விட்டு சென்றனர். பேருந்து ஓட்டுநர் அந்த லாரி மீது மோதி விட்டார். நான் மனுவில் கேட்டுள்ள நஷ்ட ஈடு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா அல்லது தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனது மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சொன்னால் சரியல்ல.

**3ஆம் எதிர்மனுதாரர் தரப்பி குறுக்கு விசாரணை**

எனது வயது, வருமானம் ஆகியவற்றை குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விபத்து நடந்த சமயத்தில் M.Sc. படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் டியூஷன் சொல்லி கொடுத்து அதன் அடிப்படையில் எனக்கு மாதம் ரூ.15000/– வருமானம் வருகிறது என பொய்யாக

சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்று சொன்னால் சில நேரங்களில் தலையில் பாரமாக இருக்கும். இந்த வழக்கில் அரசுப் பேருந்து நிர்வாக இயக்குநரையும் ஒரு தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட நாளில் லாரியானது சாலையின் ஓரத்தில் சாலை விதிகளை கடைபிடித்து ஓரமாக தான் நிறுத்தி இருந்தார் என்றும், 1 ஆம் எதிர் மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 2ஆம் எதிர்மனுதாரரின் லாரி ஓட்டுநர் எந்த விதத்திலும் பொறுப்பாகததால் 2,3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.